Released by Maran's Dog ,Toronto, Canada

Regtd. No. M. 3978.

॥ श्रीः ॥

அம்ருதலஹரீ.

மாதந்தோறும் வெளிவரும் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயார்த்த
ப்ரகாசநப் பத்திரிகை.

216

Released by Maran's Dog ,Toronto, Canada



பிலவ — மார்கழி

DECEMBER - 1961

Released by Maran's Dog ,Toronto, Canada

पातु प्रणतरक्षायां विलम्बमसहन्निव ।
सदा पञ्चायुधीं बिभ्रत्स नः श्रीरङ्गनायकः ॥

பத்ராதிபர்கள்:
ஸ்ரீ காஞ்சி ப்ர. அண்ணங்கராசாரியர்.
ஸ்ரீரங்கம் மெ. ஸுந்தரராஜாசார்யர், Mg. Ed.

வருஷச் சந்தா ரூ. 3—0—0

Released by Maran's Dog ,Toronto, Canada

அஸ்மத்குருபரம்பராப்யோ நம:

அம்ருதலஹரீ.

216

பிலவ	— பத்ராதிபர்கள் —	1961
மார்கழி	ஸ்ரீகாஞ்சி ப்ர. அண்ணங்கராசாரியர் ஸ்ரீரங்கம் மெ. ஸௌந்தரராஜாசாரியர்	DECEMBER

अनवद्यहृद्यसूक्तीर्दधती सुमनोमनोविनोदाय। अमृतलहरी प्रसर्पतु सततं श्रीरङ्गचन्द्रमस्सविधात्॥

Released by Maran's Dog ,Toronto, Canada

கவிதா சாதுர்யம்.

முன்னிதழில் "கவிதா சாதுர்யம்" என்று மகுடமிட்டெழுதிய வியாஸத்தின் முடிவில் கவிதையில் சிலேடையும் யமகமும் சிறந்தவை யென்றும் இவற்றைப் பற்றி அடுத்த இதழில் விவரிக்கிறோமென்றும் எழுதி யிருந்தோம். அவற்றைப் பற்றின விவரணமே இங்கு இப்போது ஆகின்றது. ச்லேஷம், யமகம் என்பன வடமொழிப் பெயர்கள். இவை தமிழில் சிலேடை, திரிபு என வழங்கப்படுகின்றன. இவை ஸம்ஸ்க்ருத பாஷையிலும் தமிழ்பாஷையிலும் விசேஷமாக இடம் பெற்றுள்ளன. முன்னம் வடமொழியில் சில உதாரணங்கள் காட்டிவிட்டுப் பிறகு தென்மொழியில் காட்டுகிறோம்.

Released by Maran's Dog ,Toronto, Canada

"नानार्थसंश्रयः श्लेषः—நாநார்த்தஸம்ச்ரய: ச்லேஷ:" என்பது சிலேடையின் லக்ஷணம். அநேகார்த்தங்கள் தோன்றும்படி சொற்களை அமைப்பது சிலேடையென்றபடி. விஷ்ணு பக்தியையும் சிவபக்தியையும் துல்யமாகவுடைய வொரு கவி "सर्वदोमाधवः पायात् स योऽगं गामदीधरत्— ஸர்வதோமாதவ: பாயாத் ஸ யோகங்காம் அதீதரத்." என்றான். இதில் ஸ்ரீமஹாவிஷ்ணு ரக்ஷித்தருளவேணுமென்கிற பொருளும் பரமசிவன் காக்கவேணும் என்கிற பொருளும் பதங்களைச் சிறிது ஒடிப்பதனால் கிடைக்கிறது. ஸ்ரீமஹாவிஷ்ணுபரமான பொருளில் सर्वदः माधवः पायात् सः यः अगं गाम् अदीधरत्—ஸர்வத: மாதவ: பாயாத் ஸ: ய: அகம் காம் அதீதரத் என்று பதம் பிரிக்க. [ஸர்வத] ஸகலபுருஷார்த்தங்களையும் கொடுப்பவரான. [மாதவ:] லக்ஷ்மீபதியான ஸ்ரீமஹாவிஷ்ணு. [பாயாத்] ரக்ஷித்தருள வேணும். அவர் எப்படிப் பட்டவரென்றால் அதைச் சொல்லுகிறது அடுத்த பாதம். [ய:] யாவரொரு மஹாவிஷ்ணுவானவர், [அகம்] க்ருஷ்ணாவதாரத்தில் கோவர்த்தந பர்வதத்தையும், [காம்] வராஹாவதாரத்தில் பூமியையும் [அதீதரத்] எடுத்தாரோ, ஸ: மாதவ: பாயாத் என்று அந்வயம். குன்றமெடுத்து மழை தடுத்தவரும், பிரளயார்ணவத்திலழுந்திய பூமியை வராஹாவதாரத்தில் கோட்டால் குத்தி யெடுத்தவருமான பெருமாள் காத்தருள்கவென்று எளிதாகப் பொருள்பட நின்றது.

இனி, सर्वदा उमाधवः पायात् सः यः गंगाम् अदीधरत् —ஸர்வதா உமாதவ: பாயாத் ஸ: ய: கங்காம் அதீதரத் என்று பதவிபாகம் செய்தால் பரமசிவன் பரமான பொருளும் எளிதாகக் கிடைக்கிறது. [உமாதவ:] பார்வதீ பதியான பரமசிவன் [ஸர்வதா] எப்போதும். [பாயாத்] காக்கவேணும். அவர் எப்படிப்பட்டவரென்ன, அது சொல்கிறது அடுத்த அடியினுல். [ய:] யாவரொரு சிவபெருமான். [கங்காம் அதீதரத்] கங்காதரக் கடவுள் என்னும் பெயர்க்குத் தக்கபடி விஷ்ணுபாதோத்பவையான கங்கையைத் தமது ஜடாஜூடத்தினுல் தாங்கினுரோ, ஸ: உமாதவ: பாயாத் என்று அந்வயம். இங்ஙனம் ஒரே வாக்ய விந்யாஸத்தில் விஷ்ணுபரமான பொருளும் சிவபரமான பொருளும் தோன்றும்படி இயற்றப்பட்ட இக்கவிதையில் ச்லேஷாலங்காரம் [சிலேடையணி] கொள்ளப்படுகிறது.

ஒரே வாக்விந்யாஸத்தில் கண்ணபிரான் பரமான பொருளும் இராமபிரான் பரமான பொருளும் தோன்றும் படி இயற்றப்பட்டவொரு சுலோகமும் காணீர் ;—

त्रातः काकोदरो येन द्रोग्धाऽपि करुणात्मना । पूतनामारणख्यातः स मेऽस्तु शरणं प्रभुः ॥

த்ராத: காகோதரோ யேந த்ரோக்தாபி கருணுத்மநா, பூதநாமாரணக்யாத: ஸ மேஸ்து சரணம் ப்ரபு:. இதில் கண்ணபிரான் பரமான பொருளும் இராமபிரான் பரமான பொருளும் கிடைக்கிற வழியைக் காட்டுகிருேம்.

[யேந கருணுத்மநா த்ரோக்தாபி காகோதர: த்ராத:] கருணையே வடிவெடுத்தவனுன யாவனொரு கண்ணபிரானுல் த்ரோஹியான காளிய நாகமும் காப்பாற்றப்பட்டதோ. யமுனையின் ஒரு மடுவிலிருந்து கொண்டு தன் விஷாக்னியினுல் அவ்விடத்து நீரை யெல்லாம் கொதிப்படைந்ததாக்கி, கோக்களையும் கோவலர்களையும் அணுகவொண்ணுதபடி தீங்கு விளைத்துக் கொண்டிருந்த காளிய நாகத்தின் உச்சிமேல் பாய்ந்து நடஞ்செய்து வலியடக்கி, நாககன்னிகைகளின் மாங்கல்ய பிக்ஷைக்கு இரங்கி அந்த நாகம் உயிரோடு கடலில் சென்று வாழும்படி அருள் செய்த வரலாறு இங்கு அநுஸந்திக்கப் படுகிறது. காகோதர: என்று ஸர்ப்பத்திற்குப் பெயர். உத்தரார்த்தத்தில் [பூதநாமாரணக்யாத:] என்பது பூதநாவத விருத்தாந்தத்தைச் சொல்லுகிறது. पूतनायाः मारणेन ख्यातः- திருவாய்ப்பாடியில் ஸ்ரீகிருஷ்ண சிசு தொட்டிலில் சயனித்துறங்கும் போது நஞ்சு தீற்றிய முலையை உண்ணக் கொடுத்துக் கொல்ல வந்த பூதனையை "பெற்ற தாய்போல் வந்த பேய்ச்சி பெருமுலையூடுயிரை, வற்ற வாங்கி யுண்ட வாயான்" என்கிறபடியே முலையுண்கிற பாவனையிலே அவளுயிரையு முறிஞ்சியுண்டு அவளை முடித்த கதை இங்குக் கூறப்பட்டதாயிற்று. ஆக, காளிய நாகத்தைக் கொழுப்படக்கிக் காத்தவனும் பேய்ச்சி முலை சுவைத்துப் பெரும் புகழ் படைத்தவனுமான கண்ணபிரானே நமக்குத் தஞ்சம் என்றதாயிற்று.

இனி இந்த சுலோகத்தில் இராமபிரான் பரமான பொருளும் எளிதாகக் கிடைக்கும் வழி காட்டுகிருேம். முன்பு க்ருஷ்ணபரமான பொருளில் காகோதர: என்பது ஒரே பதமாகக் கொள்ளப்பட்டது; இப்போது காக:, அதர: என்று பிரித்து இரண்டு பதமாகக் கொள்ளத் தக்கது. தர: என்று அச்சத்திற்குப் பெயர். த்ரோக்தாபி காக: அதர: த்ராத:— ஸ்ரீராமாவதாரத்தில் "சித்திரகூடத்திருப்பச் சிறு காக்கை முலை தீண்ட" என்கிறபடியே பிராட்டிக்குத் தீங்கு விளைத்து த்ரோஹம் செய்த காகமும் அச்சம் தீர்ந்ததாம்படி காக்கப்பட்ட கதை இங்குக் கூறப்பட்டதாகிறது. உத்தரார்த்தத்தில் பூதநாமாரணக்யாத: என்பது ஒரே பதமாகக் கொள்ளப்பட்டது முன்பு; இப்போது பூதநாமா— ரண க்யாத: என்று இரண்டு பதமாகக் கொள்ளத்தக்கது. பூதநாமா— பவித்திரமான திருநாமத்தை யுடையவனும், ரண க்யாத:— "प्रख्यातवीर्यस्य रञ्जनीयस्य विक्रमैः— ப்ரக்யாத வீர்யஸ்ய ரஞ்ஜநீயஸ்ய விக்ரமை:" என்று ராவணன் தானே மதித்துப் பேசும்படி போர்க்களத்தில் பெருமதிப்புப் பெற்றவனுமான இராகவன் நமக்குத் தஞ்சம் என்றதாயிற்று.

இங்ஙனே சிலேடைக்குச் சிலவிடங்கள் காட்டினது போதும். இவற்றிற் காட்டிலும் மிக மிக ஆச்சரியமான சிலேஷங்கள் ஸம்ஸ்க்ருத காவியங்களில் அபரிமிதமாகவுண்டு. அவற்றிற்கு ப்ரயோஜனம் கவியின் ஸாமர்த்தியம் விளங்குவது மட்டுமேயன்றி, பாஷையில் ஆழ்ந்த வ்யுத்பத்தியு முண்டாகும். பத்ய காவியங்களில் மட்டுமே யல்லாமல் கத்யகாவியங்களிலும் சிலேஷங்கள் அபரிமிதமாகவுண்டு. அவை காதம்பரீ முதலானவற்றில் விசேஷமாகக் காணத்தக்கன. இது நிற்க.

யமகத்தைப் பற்றிச் சிறிது பேசுவோம். பிரயோகித்த எழுத்துக்களேயே பதங்களேயே வாக்கியங்களேயே அடுத்தடுத்துப் பிரயோகித்தல் யமகமெனப்படும். இதற்கு ஏக தேஸ லக்ஷ்யமான வொரு சுலோகம் கேளீர் ;

काचाय नीचं कमनीयवाचा मोचाफलस्वादमुचा न याचे ।
दयाकुचेले धनदे कुचेले श्रिते कुचेले श्रितमाकुचेले ॥

காசாய நீசம் கமநீயவாசா மோசாபலஸ்வாதமுசா ந யாசே,
தயாகுசேலே தநதே குசேலே ச்ரிதே குசேலே ச்ரிதமாகுசேலே.

இந்த சுலோகம் யமகத்திற்கு முக்க்ய லக்ஷ்யமாகக் கொள்ளத்தக்கதன்று; ஆனாலும் இதில் உத்தரார்த்தத்தில் குசேலே என்கிற பதம் நான்கு முறை வருவதால் இதை ஏகதேசம் யமகமாகக் கொள்ளலாம். இதைச் சிறிது விவரிக்கிறோம். திருவாய்மொழியில் * சொன்னால் விரோதம் * என்னும் பதிகத்தின் ப்ரதிச்சந்தமாக வுள்ளது இந்த சுலோகம்.

என்னுடைய பரமமதுரமான வாக்கைக் கொண்டு அற்பனைத் துதி செய்து ஒரு காசும் யாசிக்கமாட்டேனென்றது பூர்வார்த்தத்தில். இனி உத்தரார்த்தத்தில் சொல்லுகிறதென்னவென்றால் " குசேலமுனிவனுக்கு ஸர்வஸ்வதாநம் பண்ணின பகவானிருக்க எனக்கென்ன குறை? " என்கிறது. அந்த பகவான் எப்படிப்பட்டவரென்ன: [தயா குசேலே] கருணைக் கடலென்றபடி. குசேல சப்தத்திற்குக் கடல் என்கிற பொருள் எங்ஙனே யென்னில்; * गोत्रा कुः पृथिवी पृथ्वी * என்ற அமரகோசத்தின்படி (கு) என்று பூமிக்குப் பெயர். 'சேல'; என்று ஆடைக்குப் பெயர். பூமிக்கு ஆடையாயிருப்பது ஸமுத்ரம்; * கண்ணார் கடலுடுக்கை * என்றது சிறிய திருமடலில். (ஸமுத்ராம்பரா) என்று பூமிக்குப் பெயர் பிரஸித்தம். ஆக குசேல: என்பது ஸமுத்ரத்திற்குப் பெயராகக் குறையில்லை. தயாஸமுத்ரமானவர் பகவான் என்றதாயிற்று. அவர் இன்னும் எப்படிப்பட்டவரென்னில்; [श्रिते कुचेले कुचेले धनदे— ச்ரிதே குசேலே குசேலே தநதே] இந்த வாக்யத்தில் குசேலே என்பது இருமுறை வந்திருக்கிறது. ஒன்று விசேஷணம், மற்றொன்று விசேஷ்யம். குத்ஸிதமான ஆடையை யணிந்துள்ளவரான குசேல முனிவன் விஷயத்திலே என்றதாயிற்று. அவர் விஷயத்தில் தநதே— குபேரனாக இருந்தவர் என்கை. தாநாமுஷ்டி முசே குசேல முநயே தத்தேஸ்ம வித்தேஸதாம்'' என்ற வைராக்ய பஞ்சக ஸூக்தியை இங்கு நினைப்பது. அந்த பகவான் இன்னும் எப்படிப்பட்டவ ரென்னில்; [श्रितमाकुचेले— ச்ரிதமா குசேலே.] மலராள் தனத்துள்ளான் என்பது தேர்ந்த பொருள். எங்ஙனே இப்பொருள் தேறுமென்னில், விவரித்துக் காட்டுகிறோம்; இந்த விவரணம் வடமொழிப் புலவர்களுக்கே ரஸிக்கும். குச ஏவ இலா-குசேலா; மாயா: குசேலா மாகுசேலா; ச்ரிதா மாகுசேலா யேந ஸ:— ச்ரிதமாகுசேல:- தஸ்மின். என்று விக்ரஹம் கொள்ளவேணும். " விபுலா கஹ்வரீ தாத்ரீ கௌ: இலா கும்பிநீ க்ஷமா '' என்ற அமரகோசத்தின்படி இலா என்பது பூமிக்கு வாசகம். அது ஸ்தலம் என்றபடியாகும். ஸ்தனமாகிற ஸ்தலம் என்றதாயிற்று. [மாயா: குசேலா ச்ரிதா யேந] பெரிய பிராட்டியாருடைய திருமுலைத் தடத்தை ஆச்ரயித்திருப்பவர் என்றதாயிற்று.

ஆக, கருணைக்கடலாயும், அழுக்கான வஸ்த்ரமணிந்திருந்த குசேல முனிக்கு ஸர்வஸ்வ தாநம் பண்ணினவராயும், பெரிய பிராட்டியாருடைய திருமுலைத் தடத்தை யுகந்திருப்பவரு மான பெருமாள் எழுந்தருளியிருக்க அவரை விட்டு அற்பமான பொருளை நச்சி நரஸ்துதி பண்ணமாட்டேனென்றதாயிற்று.

யமகரத்நாகரம் என்றொரு ஸம்ஸ்க்ருத காவியம் வியாக்கியானத்தோடுங் கூட நெடு நாளைக்கு முன் தெலுங்கு லிபியில் அச்சிடப்பட்டுள்ளது. இது கூரத்தாழ்வானருளிச் செய் ததாக அச்சிலுள்ளது. சில காரண விசேஷங்களினால் இது கூரத்தாழ்வானுடைய க்ருதி யன்று என்று பெரியோர்களால் முடிவு செய்யப்பட்டிருக்கின்றது. எனினும், கூரத்தாழ் வான் போன்ற மஹாவித்வானொருவரால் இது இயற்றப்பட்ட தென்பதில் ஐயமில்லை. ஸ்ரீ க்ருஷ்ணவதார சேஷ்டிதங்களை விவரிப்பதும் ஐந்நூறு சுலோகங்களுக்கு மேல் கொண்டது மான இக்காவியத்தில் யமகமில்லாத சுலோகமே கிடையாது. இக்காவியத்தைப் பாட மாக, வாசிப்பவர்களுக்கு ஸம்ஸ்க்ருத பாஷை ஸர்வாத்மநா ஸ்வாதீனமாகு மென்னத் தட்டில்லை.

தென்மொழியில் சிலேஷ யமகங்களைப் புகுத்திக் கவிபாடினவர்களில் திவ்விய கவி பிள்ளைப் பெருமாளையங்கார் தலைமை பெற்றவர். அதைப்பற்றி அடுத்த இதழில் விவரிப் போம்.

திவ்ய தேசாநுபவம்

(மலை நாடு)

திருக்கடித்தானம்.

(முன் தொடர்ச்சி)

மலைநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்றான திருக்கடித்தானத்தை அனுபவித்துக்கொண்டு இருக்கிறோம் இப்போது. அவதாரிகை மட்டுமே முன்னிதழில் வெளிவந்தது. மிக விரிவாக அமைந்த அவ்வவதாரிகையைச் சுருக்கிச் சொல்லுவோமிவண் முன்னம். திருவாய்மொழியில் எட்டாம்பத்தின் ஆறும் பதிகமான எல்லியுங் காலையும் என்பதற்கு முந்தின பதிகத்தில் ஆழ்வார் வெளியிட்ட தம்முடைய அபரிமிதமான கிலேசத்தைத் தீர்க்கக் கருதிய எம்பெருமான் உடனே நேரில் பதறி வந்து முகங்காட்டுவது வெள்ளக் கேடாகுமென்று கருதி, சிறிது பொறுத்துக் கலக்கைக்காகத் திருக்கடித்தானமென்னும் திருப்பதியிலே யெழுந்தருளியிருந்தான்; இதனையறிந்த ஆழ்வார், எம்பெருமான் இப்படியாகத் தம் திறத்துச் செய்கிற மையலைச் சிந்தித்து உள்ளடங்காத இனிமையை யெய்தி அவ்வினிமை தன்னையே, பாசுரமாகப் புறப்பட விடுகிறார். ஒவ்வொரு பாட்டையுமெடுத்துக் காட்டிச் சுவைமிக விளக்குவோம்.

1. எல்லியுங் காலையுந் தன்னை நினைந்தெழ
நல்லவருள்கள் நமக்கே தந்தருள் செய்வான்
அல்லியந் தண்ணந்துழாய் முடியப்பனூர்
செல்வர்கள் வாழுந் திருக்கடித்தானமே.

பெருதவிபுரியும் தன்னையே இரவும் பகலும் நினைந்து உய்யுமாறு நமக்கே அஸாதாரணமாகப் பேரருள் புரியுமவனும், குளிர்ந்தழகிய திருத்துழாய் மாலையணிந்த திருமுடியையுடையனுமான

எம்பெருமானது தலம் எதுவென்றால், அத்தாணிச் சேவகம் புரிவதையே செல்வமாகக் கொண்டவர்கள் அச்செல்வம் பொலிய நின்று வாழப்பெற்ற திருக்கடித்தானமாகும்.

பாசுரம் தொடங்கும்போதே எம்பெருமான் தம் திறத்துச் செய்தருளும் பேரருளின் கனத்தைக் கொண்டாடிப் பேசுகிறார். பகலென்றும் இரவென்றும் பாராமல் எக்காலத்திலும் தன்னையே நினைத்து உஜ்ஜீவிக்கும்படி செய்து போருமிவ்வருளை என் சொல்ல வல்லேனென்வாய் கொண்டேயென்று திணறுகிறார். என்னுடைய குற்றங்களைப் பார்த்தானாகில் அவன் அருளுகைக்கு அவகாசமுண்டோ? நான் அகிஞ்சநனென்று என்னுடைய வெறுமையையே பார்த்துத் தன் பேறாக அருளுமிவ்வருள் என்னே! யென்று வியக்கிறார். ஈழே மாயக்கூத்தன் பதிகத்திலே தாம் பட்ட துயரத்திற்காக அருள்செய்கிறானென்று நினையாதே தன் பேறாக அருள்செய்வதாகவே நினைக்கிறார். உண்மையில் இப்படித்தானே நினைக்க ப்ராப்தம். அதுவுமன்றி, இப்படிப்பட்டவருள் வேறொருவர்திறத்திலன்றிக்கே தம் திறத்திலேயே செய்வதாகவும் கருதி "நமக்கே தந்தருள் செய்வா"னென்கிறார். தாம் பெற்றவருள் நித்யஸூரிகளும் பெற்றிலர் என்பதே ஆழ்வாருடைய திருவுள்ளம்.

"நல்லவருள் நமக்கே தருவான்" என்பது போதுமாயிருக்க 'நல்லவருள்கள்' என்று அருளின்மேல் பன்மை விகுதியிட்டுக் கூறினதும், மீண்டும் 'அருள் செய்வான்' என்றதும் உற்று நோக்கப்படுமிடத்து. தாம் பெற்றவருளின் கனம் மிகச் சீரியதென்று அறிவிக்கப்பட்டதாகும். அந்தச் சீர்மையை ஈண்டு விவரித்துக் காட்டுவோம்.

முதற் பிரபந்தமான திருவிருத்தத்தில் "பெருங்கேழலார் தம் பெருங்கண்மலர்ப் புண்டரீகம் நம்மேலொருங்கே பிறழவைத்தார் இவ்வகாலம், ஒருவர் நம்போல்வருங் கேழ்பவருளரே தொல்லை வாழியம் சூழ்பிறப்பு மருங்கே வரப்பெறுமே? சொல்லு வாழி மடநெஞ்சமே!" என்னப் பண்ணினவருள் முதன்மையான அருள். பிரளய வெள்ளத்தி லழுந்தின பூமியை யெடுப்பதற்கு மஹாவராஹரூபியான ஞானப்பிரான் தம்முடைய செந்தாமரைப் பூப்போன்ற திருக்கண்களால் நம்மைக் கடாக்ஷித்தருளினார்; அவரோடு பொருந்திய ஸம்பந்தம் பெற்றவர் நாம் தவிர வேறு யாரேனுமுளரோ? எவருமிலர்; இவ்வுறவு நமக்கே அஸாதாரணம். நம்முடைய வாழ்வு ஒருநாள் வரையிலே தொலைந்துபோம் வாழ்வல்லவே; இங்ஙனே வாழ்ச்சிபெற்ற நமக்கு ஸம்ஸாரத் துன்பம் அருகிலும் வரக்கூடுமோ? சொல்லாய் நெஞ்சமே! என்று களித்துப் பேசும்படி பண்ணின திருவருள் முதன்மையானது.

எம்பெருமான் இங்ஙனே எதற்காக வருள் செய்தானென்பது பற்றி ஆசாரியர்கள் அருளிச் செய்திருப்பது மிக வற்புதமானது. ஆசார்ய ஹ்ருதயத்தில் இரண்டாம் பிரகரணத்தில் "அதுக்கு ஹேது ஊழிதோறும் சோம்பாது" என்றுள்ள சூர்ணையின் ஸாரமான கருத்தை இங்குக் கூறுவோம். உலகில் பயிர் செய்பவர்கள் தங்கள் முயற்சி பழுதுபட்டாலும் கூட சோம்பிக் கைவாங்காமல் பின்னையும் பயிர் செய்வதிலேயே முயல்வதுபோல, எம்பெருமான் கற்பந்தோறும் செய்துபோரும் ஸ்ருஷ்டி பயன்படாதிருக்கவும் அதில் கைவாங்காமல் என்றேனு மொருநாள் பலிக்குமென்று உகந்து மேன்மேலும் ஜகத்ஸ்ருஷ்டியைப் பண்ணி ஸ்ருஷ்டித்த ஜகத்தில் உட்புகுந்து, அறிய வேண்டுமர்த்தங்களையெல்லாம் அறிவிப்பனவான நூல்களையும் வெளியிட்டு, திருப்பாற்கடலிலே திருவனந்தாழ்வான் மீதேறிப் படுக்கை வாய்ப்பாலே கண்வளர்ந்தருளுகிற பாவனையாய் ஜகத்தைக் காக்கும் விரகு சிந்தித்து, சிந்தித்த உபாயத்திற்குத் தகுதியாக என்றேனும் கட்கண்ணால் காணக் கூடாத தான் மனிதர் பிறவியில் தோன்றிக் கண்காண வந்து 'எனக்கு அடிமையாவாருண்டோ?' என்று தேடியும் கிடைப்பாரில்லாமையாலே மிருகங்களைக்கொண்டே மிருகம் பிடிப்பது போலவும், பறவைகளைக்கொண்டே பறவை பிடிப்பதுபோலவும் ஸம்ஸாரிகளைக்கொண்டே ஸம்ஸாரிகளைப் பிடிக்கவேணு மத்தனையென்று கருதி 'அதுக்கு ஆவார் ஆர்?' என்று தேடி, பண்டொரு நாள் உலகளந்த காலத்தில் தன்னுடைய திருவடித்தாமரை எவ்வளவு பரம்பியதோ அவ்வளவும் தன்னுடைய திருக்கண்களைப் பரப்பிப் பார்த்தவிடத்திலும் ஓரிடத்திலும் அதுக்கு ஆவாரைக்

காணமல்; மன்னுடைய விபீடணற்கா மதிளிலங்கைத் திசை நோக்கி மலர் கண்வைத்த" என்றும் "அன்பொடு தென்திசை நோக்கிப் பள்ளிகொள்ளும்" என்றும் சொல்லுகிறபடியே தனக்குப் பள்ளமடையான தென்திசையிலே மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்துகொண்டிருந்த இவர் மேலே அத்திருக்கண்ணோக்கம் பட "எங்கும் பக்க நோக்கறியான் என் பைந்தாமரைக் கண்ணனே" (திருவாய்மொழி 2—6—2) என்று தாமே வியந்தே கூறும்படி பெரிய பிராட்டியார் முதலான நாய்ச்சிமார் திருமுலைத்தடத்தாலே நெருக்கியணைந்தாலும் அவர்களைப் புரிந்து பாராதே தம்மையே பார்த்துக்கொண்டிருக்கும்படியான விசேஷ கடாக்ஷம் செய்தது ஒப்பற்ற திருவருளாகும்.

இதற்குமேல் "மயர்வற மதிநல மருளினன்" என்னும்படி செய்தவருள் இதற்கும் மேற்பட்டதென்னலாம். மயர்வற மதிநல மருளுகையாவது என்னென்னில்: இருள் துயக்கு மயக்கு மறப்பு என்கிற நான்கு வகையான அஜ்ஞானங்கள் நீரும்படி செய்து நல்ல ஞானத்தையும் பக்தியையும் அருள் செய்கை. அஜ்ஞானத்தில் நான்கு வகைகளாவன-ஒருவன் ஒரு விஷயத்தை அடியோடு தெரிந்துகொள்ளாமலிருப்பதுண்டு; இதற்கு இருள் என்று பெயர். தெரிந்து கொள்வதை சந்தேகமாகத் தெரிந்துகொள்வதும் அஜ்ஞானமே இதற்குத் துயக்கு என்று பெயர். சந்தேகமாக வல்லாமல் நிச்சயமாகத் தெரிந்துகொண்டும் உள்ளது உள்ளபடியன்றிக்கே மாறுபாடாகத் தெரிந்துகொள்வதும் அஜ்ஞானமே; இதற்கு மயக்கு என்று பெயர். சந்தேகமாகவும் மாறுபாடாகவுமல்லாமல் உள்ளபடி யுணர்ந்திருந்தும் அது மறக்கப்பட்டொழியுமேயானால் மறப்பாகிய அதுவும் அஜ்ஞானமே. ஆக இப்படிப்பட்ட அஜ்ஞானங்களை அகற்றி ஞான பக்திகளைத் தந்தருளினது மிக மேற்பட்ட வருளன்றோ. தந்தருளின அந்த ஞானபக்திகளை "காதல் கடல்புரைய விளைவித்த காரமர் மேனி" என்றும் "காதல் கடலில் மிகப் பெரிதால்" என்றும் "என் காதல் மண்திணி ஞாலமுமேழ்கடலும் நீள்விசும்புங் கழியப் பெரிதால்" என்றும் சொல்லும்படி மேன்மேலும் மிக மிக வளர்த்துக்கொண்டு போருவது ஒப்புயர்வற்ற திருவருளன்றோ? ஆக இவற்றையெல்லாங் கருதி "நல்லவருள்கள் நமக்கே தந்தருள் செய்வான்" என்றருளிச் செய்தபடி.

அல்லியந் தண்ணந்துழாய் முடியப்பன்-இப்பதிகத்தின் கீழ்ப்பதிகத்தில் (பா-3.) "முடிசேர் சென்னியம்மா! நின்மொய்பூந் தாமத்தண்டுழாய், கடிசேர்கண்ணிப் பெருமானே யென்றென்றேங்கி யழுதக்கால்" என்று, தோளிணை மேலும் நன்மார்பின் மேலும் சுடர்முடி மேலும் தாளிணை மேலும் புனைந்த தண்ணந் துழாயுடையம்மானாகிய பரமன் திருமுடியிலே திருத்துழாய் மாலையை யணிந்துகொண்டு காட்சி தரவேணுமென்று விரும்பி, அங்ஙனம் காட்சி தாராமையினால் பொருமிப் பொருமி யழுத அழுகை தீர அல்லியந் தண்ணந்துழாய் முடியப்பனாகக் காட்சி தந்தருள, இதையும் ஒரு நல்லவருளாகக் கருதியருளிச் செய்கிறபடி. பெரும்பசியன் பெருஞ்சோற்றுத் திரளையைக் கண்டு உகக்குமாபோலே ஆழ்வார் திருத்துழா யலங்கலணிந்த திருமாலைக் கண்டவாறே உள்ளம் பூரிப்பரன்றோ: இதனின் மேற்பட்ட அருள் இல்லையென்றும் கருதுவர். இப்படி அருளே வடிவெடுத்த பெருமான் வாழுமிடம் எதுவென்ன, செல்வர்கள் வாழும் திருக்கடித்தானம் என்கிறார்.

செல்வர்கள் வாழுமென்றது தனிகர்கள் வாழுமிடம் என்றபடியன்று; கொள்ளென்று கிளர்ந்தெழுந்த பெருஞ்செல்வம் நெருப்பாக" என்று கீழே யருளிச்செய்த இவ்வாழ்வார் ஆபாஸமான செல்வத்தை ஒன்றாக மதிப்பவரல்லரே. கஜேந்திராழ்வானும் இளையபெருமாளும் விபீஷணாழ்வானும் கைங்கர்ய ருசியுடைமையே காரணமாக முனிவர்களால் செல்வர்களாக வழங்கப் பட்டுள்ளார்கள்: முதலையின் வாயிற் கோட்பட்டு உதிரமொழுக நின்ற கஜேந்திராழ்வான் ஸ து நாகவர: ஸ்ரீமாந்" என்று செல்வனாகச் சொல்லப்பட்டான். அத்துன்ப நிலையிலும் கையிற் பறித்த தாமரைப்பூவைத் திருமால் திருவடிகளிலே சமர்ப்பித்துக் களிக்கவேணுமென்று அவன் கொண்டிருந்த குதுகலமே இங்குச் செல்வமாகக் கருதப்பட்டது. இளையபெருமாள் [இலக்குமணன்] மண்வெட்டியையும் புட்டிக்கூடையையும் கையிலே கொண்டு காட்டுக்குப் புறப்பட்ட

தன்மைக்குச் சேர "லக்ஷ்மணோ லக்ஷ்மி ஸம்பந்ந:" என்னப்பட்டான்; ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி வழுவிலா வடிமை செய்ய விரும்பியிருந்தமையே அதனுக்குச் செல்வமாகச் சொல்லப்பட்டது. விபீஷணாழ்வான் இராவணனாலும் துரத்தித் தள்ளப்பட்டு வானரமுதலி களாலும் தகர்க்கப்பட்டு ஆகாசத்திலே தத்தளித்து நிற்கும் நிலையிலே "அந்தரிக்ஷகத: ஸ்ரீமான்" என்று செல்வனாகச் சொல்லப்பட்டான்; இராமபிரான் திருவடிகளிலே அவன் கொண்டிருந்த திடமான பத்தியே இங்குச் செல்வமாகக் கருதப்பட்டது. இப்படிப்பட்டவர்களே செல்வர் களாவர்; நிச்சலும் திருமாலின் திருப்பணிகளிலே ஊன்றினவர்கள் வாழுமிடம் திருக்கடித்தானம் என்றதாயிற்று.

இவ்வாழ்வார் தாமே ஒரு பதிகத்திற்குப் பயனுரைக்குமிடத்து "உலகிலேந்து பெருஞ் செல்வத்தராய்த் திருமாலடியார்களைப் பூசிக்க நோற்றார்களே" என்றருளிச் செய்துள்ளார்; திருமாலையும் திருமாலடியார்களையும் பூசிக்க வாய்க்குமாகில் பெருஞ்செல்வம் திரட்டுவதும் பாங்கேயாகுமென்க. ஆகவே பகவத் பாகவத ஸமாராதனமே போதுபோக்கான தனிகர்கள் வாழுமிடம் என்றலும் பொருந்தும். (தொடரும்)

ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்தப்ரகாசிகையின் ப்ரகாசநம்.

[மெ. ஸ.]

ஸ்ரீமதுபயவேதாந்த வித்வத் ஸார்வபௌமரா யெழுந்தருளியிருந்த காரப்பங்காடு சிங்கப்பெருமாள் ஸ்வாமியை ஸ்ரீவைஷ்ணவ வுலகில் அறியாதாரில்லை. அந்த ஸ்வாமி திரு நாட்டுக் கெழுந்தருளி ஏறக்குறைய முப்பது ஸம்வத்ஸரங்களிருக்கும். அந்த ஸ்வாமி தாம் எழுந்தருளி யிருந்த காலத்தில் அத்விதீய வித்யா நிதியாக விளங்கி வந்தார். திருவரங்கம் பெரிய கோயிலிலும் ஸ்ரீரங்கநாராயணஜீயர் மடத்தில் பலவாண்டு உபய வேதாந்த க்ரந்த காலக்ஷேபம் ஸாதித்துக் கொண்டெழுந்தருளி யிருந்தார்.

அக்காலத்தில் மதுரையில் ஹரிஸமய திவாகரம் என்றொரு மாஸிகப் பத்திரிகை நடைபெற்று வந்தது. அதன் ஆசிரியருடைய வேண்டுகோளுக்கிணங்கி ஸ்ரீ சிங்கப்பெரு மாள் ஸ்வாமி ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாசிகை என்றொரு திவ்யமான க்ரந்தத்தை எழுதி யநுக்ரஹிக்க, அது அப்பத்திரிகையில் 'மாதந்தோறும் யதாவகாசம் வெளியிடப் பட்டு வந்தது. அந்த பத்ரிகையும் தொடர்ந்து வெளிவராமல் நின்றுவிட்டது. ஸ்வாமியும் திரு நாடலங்கரிக்க நேர்ந்தது. அதனால் அந்த க்ரந்தம் பூர்த்தி யடையாமல் நின்றுவிட்டது.

அந்த க்ரந்தம் வெளிவந்த வரையில் அத்புதமான அனேக சாஸ்த்ரார்த்தங்களைக் கொண்டிருந்த படியாலே அதில் பலர்க்கும் விருப்ப மிருந்தது. அது தனிப் புத்தகமாக அச் சிடப் பெற்றுக் கிடைத்தால் மஹோபகாரமாயிருக்கு மென்று பல பெரியோர்கள் பாரித்துக் கொண்டிருந்தார்கள். மஹாக்ரந்தம் அபூர்ணமாய் நின்றதே யென்கிற குறையோடுகூட, க்ரந்தம் அவதரித்த வரையில் ஸுலபமாவதற்கு வழியில்லாமலிருக்கிறதே யென்கிற பெருங் குறையும் பலர்க்கு இருந்து வந்தது. அக்குறை இப்போது நீங்கப் பெற்ற பரமஸந் தோஷத்தை வெளியிடுகின்றோமிங்கு.

மதுரையில் வாழும் ஸ்ரீமான் V. சேஷராமாநுஜய்யா என்கிற பரமபக்தர் இந்த க்ரந் தத்தை மதுரை ஹரிஸமய திவாகர அச்சுக்கூடத்திலேயே வெகு நேர்த்தியாக அச்சிடுவித்து ஸமீபகாலத்தில் வெளியிட்டுள்ளார். டிம்மி ஸைஜில் 112 பக்கங் கொண்ட இந்த க்ரந்தத்தில்

பல அபூர்வ விஷயங்களை ஸேவிக்கப் பெறுகிறோம். இந்நூல் பிரமாணபரிச்சேத மென்றும் பிரமேய பரிச்சேத மென்றும் இரு பகுதிகளாக வகுக்கப் பெற்றுள்ளது. ப்ரமாண பரிச்சேதம் முடிவு பெற்றதே யொழிய ப்ரமேய பரிச்சேதம் இன்னமும் மிகவும் ஸாவசேஷமாக வுள்ளது. எம்பெருமானார் தரிசனத்தின் அர்த்த விசேஷங்களும் தென்னாசார்ய ஸம்ப்ரதாயத்தின் விசேஷார்த்தங்களையும் விளக்குவதற்காகவே இந்த மஹாக்ரந்தம் திருவவதரித்தது. இது வெளிவந்துள்ள வரையில் பரம போக்யமாக அநுபவிக்கத் தக்கது.

விலை ஒரு ரூபாய் மட்டுமே.

கிடைக்கு மிடங்கள்:—

ஸ்ரீ விலாஸ புஸ்தகசாலை,
ஸ்ரீரங்கம்.

V. சேஷராமாநுஜய்யர்,
50. லக்ஷ்மீபுரம் 3வது தெரு, மதுரை.

காஞ்சீபுரீ விசேஷம்.

நமது லஹரியின் தலைமையாசிரியரால் காஞ்சீபுரியில் 1913-ம் வருஷத்தில் ப்ரதிஷ்டாபிதமாய் நடைபெற்று வருகின்ற வேத வேதாந்த வைஜயந்தி பாடசாலையில் 1919 ஆம் வருஷம் கார்த்திகைமீ சித்திரா நக்ஷத்திரத்தில் நித்ய ப்ரதக்ஷிண கோஷ்டி ப்ராரம்பிக்கப்பட்டது. அதாவது. நாடோறும் பின்மாலை 4 மணி முதல் 5 மணி வரையில் அத்யயன தினங்களில் யஜுர்வேத க்ரம பாராயணமும், அநத்யயந தினங்களில் பஞ்சஸ்தவாதி ஸ்தோத்ராநுஸந்தானமுமாக அவிச்சிந்நமாய் நடைபெற்று வரும் கோஷ்டி இது. நேற்று கார்த்திகைமீ சித்திரை நக்ஷத்திரத்தில் இந்த கோஷ்டிக்கு நாற்பத்திரண்டு ஆண்டு பூர்த்தியாகி நாற்பத்துமூன்றுமாண்டு தொடக்கமாயிற்று. இந்த அப்தபூர்த்திக் கொண்டாட்டம் பிரதிஸம்வத்ஸரம் நடைபெற்று வருகிற முறையில் இந்த ஸம்வத்ஸரமும் 2—12—61 முதலாக மூன்று நாள் விசேஷ பாராயண கோஷ்டிகளுடனும் உபந்யாஸ கோஷ்டியுடனும் இனிது நடைபெற்றுத் தலைக்கட்டிற்றென்பதை ஆனந்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

விலாஸ மாறுதல் குறிப்பு.

நமது லஹரியின் தலைமையாசிரியரான ஸ்ரீகாஞ்சி. பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமி மார்கழித் திங்கள் முப்பதும் திருப்பாவை ப்ரவசனத்தை யுத்தேசித்து சென்னைமாநகரிலேயே எழுந்தருளி யிருப்பதால் 15—12—61 To 15—1—62 ஸ்வாமிக்குக் கடிதங்கள் எழுதிக்கொள்ள விலாஸம்—

48. கோவிந்தப்பநாய்க்கன் வீதி, மதராஸ்— 1.

தினப்படி காலை வேளைகளில் 7 மணி முதலாக T. நகர் வாணீ மஹாலிலும். மாலை வேளைகளில் 6 மணி முதலாக உப்பட்டூர் ஆழ்வார் செட்டியார் சாரிடி ஹாலிலும் ஸ்வாமியின் உபந்யாஸங்கள் நடைபெறும்.

Released by Maran’s Dog ,Toronto, Canada

12. சததூஷணீ க்ரந்தத்திற்குக் கண்டனமாக ஒரு அத்வைதி பண்டிதர் ஶதபூஷணீயென்றொரு கண்டன நூல் வெளியிட்டிருந்தார். அதற்கு நம் ஸ்வாமி யொருவரே முன்னின்று ஶதபூஷணீ வஜ்ரகுடாரமென்கிற மறுப்பு நூலை ஸம்ஸ்க்ருத பாஷையிலும் தமிழ் பாஷையிலும் வெகு விரைவாக வெளியிட்டார். அதன்மேல் வெளி வந்த ஏகதேச மறுப்புக்கும் வஜ்ரகுடார விஜயத்வஜமென்கிற கண்டந க்ரந்தத்தை நம் ஸ்வாமியே உபய பாஷையிலும் வெளியிட்டு ப்ரதிபக்ஷியை வாய்மூடி நிற்கச் செய்திருக்கிறார். ஆண்டவனாச்ரமத்திலிருந்து வெளிவந்து கொண்டிருந்த பாதுகா பத்ரிகையில் இதைப்பற்றி அபரிமிதமான புகழுரைகளை ஆண்டவன் சிஷ்யர்கள் நிஸ்ஸங்கோசமாக வெளியிட்டிருந்தார்கள். "தேசிக ஸ்ரீஸூக்தி ப்ரகாஶகத்வப் புகழ் எப்படி அண்ணங்கராசார்ய ஸ்வாமி யொருவரையே சார்ந்ததோ; அப்படியே தேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷகத்வப் புகழும் அவரொருவரையே சார்ந்ததாயிற்று" என்பது அவர்களுடைய ஸாரமான வாசகம். இவ்விஷயத்தில் ஸ்ரீஸ்வாமி செய்திருப்பதென்னவென்றால், 'சததூஷணீ கண்டனமென்று சதபூஷணியை யெழுதின சாஸ்திரியானவர் சததூஷணியைக் கண்ணாலும் பார்த்தவரல்லர்; அதில் என்ன சொல்லியிருக்கிறதென்பதை அணுவளவும் அறிந்தவருமல்லர்; பாமர ப்ராமகமாக தத்கண்டனமென்று ஒன்று எழுதிவைத்தாரத்தனை. சததூஷணீ க்ரந்தத்திற்கும் இவருடைய சதபூஷணீ க்ரந்தத்திற்கும் எவ்விதமான தொடர்பும் கிடையாது' என்பதை அசைக்கமுடியாதபடி நிலைநாட்டி வைத்திருக்கிறார் காஞ்சீ ஸ்வாமி.

இந்தப் பெருமையில் பொறாமை கொண்ட ஸம்வாதச் சுவடி இதைப்பற்றி என்ன எழுதுகின்றதென்றால், இந்த வஜ்ரகுடார க்ரந்தத்தை மதுராந்தகம் வீரராகவாசாரியரென்பவர் எழுதிக் கொடுத்தாராம்; அதை ஸ்வாமி தம் பெயரால் வெளியிட்டுக் கொண்டாராம். இப்படியொரு தேறுதலடைகின்றது ப்ரதிபக்ஷிவர்கம். ஐயோபாவமையங்காரென்று ப்ரஸித்தரான அந்த வீரராகவாசாரியருடைய யோக்யதை எவ்வளவிதென்பதை காஞ்சீ ஸ்வாமியின் பல நூல்கள் விளக்கியுள்ளன. முடிவாக ஸ்ரீரங்கநாத பாதுகாஸமீக்ஷா (அல்லது) விமர்சபரீக்ஷா விமர்சநம் என்கிற ஸ்வாமியின் திவ்யக்ரந்தம் 19—1—59ல் வெளியானது அந்த வீரராகவாசாரியருடைய பாண்டித்யத்திற்குப் பரீக்ஷா நிகஷோபலமாக அமைந்திருக்கின்றது. இவர் ஸ்வாமிக்கு விஷயதானம் செய்தாரென்பதும், இவரிடத்தில் ஸ்வாமி பல மருமங்களை யுணர்ந்தாரென்பதும் ஏகதேஶிவர்கமும் நம்பமாட்டாதவை யென்பதை இவர்கள் அறியாதவர்களல்லர்.

சென்னையில் T. ரங்காசாரியார் என்று ஸுப்ரஸித்தரான பிரபல வக்கீலொருவர் இருந்தார், அப்பெரியார் ஸ்வல்பம் வாசித்திருந்த வொருவரை ஏதோ தாக்ஷிண்யத்தினால் தம்மிடம் குமாஸ்தாவாக வைத்துக் கொண்டிருந்தார். அந்த குமாஸ்தா தன்னுடைய யோக்யதை இவ்வளவென்பதை அறிந்தோ அறியாமலோ பலரிடமும் சொல்லிக் கொண்டிருந்தாராம்— "T. ரங்காசாரியார் லா பரீக்ஷைக்குப் போனபோது என்னையும் கூட அழைத்துக் கொண்டு போனார்; அவர் பெரிய ஹாலுக்குள்ளே கொச்சின் பேபருக்கு ஆன்ஸரெழுதும் போது நான் வெளி வரண்டாவில் சோம்பேறி மாதிரி திரிந்துகொண்டிருப்பேன். அவர் தமக்கு ஸந்தேஹமான விடங்களை ஒரு சிறு சீட்டில் எழுதி ஜன்னல் வழியாய் என்னை நோக்கி யெறிவார்; நான் உடனே ஆன்ஸரெழுதி உள்ளே போட்டு விடுவேன்; அந்த நன்றியறிவினால்தான் அவர் என்னை விடாமல் வைத்துக் கொண்டிருக்கிறார்" என்று சொல்லிக் கொண்டிருந்தாராம். அப்படியே இவர்களும் சொல்லிக் கொண்டிருந்தால் வியப்பென்ன?

Released by Maran’s Dog ,Toronto, Canada

13. இதர வித்வான்களின் நூல்களில் காஞ்சீபுரம் ஸ்வாமி யெழுதும் ஆக்ஷேபணைகளெல்லாம் பெரும்பாலும் அச்சுப்பிழைகளையே பெரிதாகக் கொண்டு தோன்றினவை— என்று ஸம்வாதச் சுவடியில் இதுவொரு மாய மயக்கு. உலகத்தில் எப்படிப்பட்ட புத்தகங்களிலும் அச்சுப் பிழைகள் நேருவது ஸஹஜம். இது அச்சுத் தவறு என்று யாவர்க்கும் எளிதாகப் புலப்பட்டு விடும். அத்தகைய பிழைகளைப் பாமரர்களும் எடுத்துப் பேசார்கள். ஸ்வாமி

Released by Maran’s Dog ,Toronto, Canada

யெடுத்துக் கண்டிக்கும் விஷயங்கள் ஒவ்வொன்றும் எதிரிகள் அச்சுப்பிழை யென்று சொல்லியும் உய்ய முடியாதவை என்பது பண்டித கோஷ்டிகளில் பிரஸித்தம். எத்தனை பண்டிதர்களின் வாதங்களை ஸ்வாமி கண்டித்திருக்கிறார்: எவ்வெவ்விதமாகக் கண்டித்திருக்கிறார்: அவற்றுக்கு எவ்விதமான மறுப்பு வெளிவந்து பங்கமடைந்தது? இத்யாதி விஷயங்களைச் சிறிதும் மறவாமல் நினைவில் வைத்துக் கொண்டிருக்கிற வித்வான்களுக்கு இங்கு நாம் அதிகம் தெரிவிக்க வேண்டிய தொன்றுமில்லை. பிரகிருதம் வெளி வந்திருக்கின்ற ஸம்வாதச் சுருணை யானது பல பல பண்டிதர்களின் மேற்பார்வையில் திருத்தப்பட்டு வெளிவந்திருக்கின்றது. இதிலும் எத்தனையோ அபப்ரம்ஶங்கள். ஒன்றிரண்டு காட்டினல் போதுமன்றோ. "லக்ஷ்மீ நரஸிம்ஹாசாரியர்க்கு விலையுயர்ந்த சால்வையைப் போற்றினர் அண்ணுஸ்வாமி" என்றெழுதப் பட்டுள்ளது. போற்றுவதாவது என்ன? என்பதைக் கூட அறியாதவர்கள் இவர்கள். போர்வை, போர்த்தல். போர்த்துதல் முதலான ஸாமான்யச் சொற்களைக் கூட அறியாதவர்கள் நம் ஸ்வாமியோடு வாதத்திற்கு அர்ஹதையுள்ளவர்களா? என்பதை விவேகிகள் விமர்சிக்க வேணும். பிரமாணங்களை யுதாஹரிக்கிற வகையிலும் இவர்களுடைய ஸ்காலித்யம் அளவு கடந்தது. "घुणक्षतलिपिक्रमादुपनिपातिनः पाति नः— குணக்ஷதலிபிக்ரமாதுபநிபாதிந: பாதிந:" என்பது வேதாந்தவாசிரியருடைய ரஹஸ்ய சுலோகங்களில் எடுத்தாளப் பட்டுள்ளது. இதன் பொருள் என்ன? என்பதையும் இவர்கள் அறியார்கள்: ஆகரமுமறியார்கள். இதை இவர்கள் ஸம்வாதச் சுருணையில் அஸ்தாநே எடுத்துக் காட்டின விடத்தில் (குண க்ஷிதி லிபி) என்று காட்டியுள்ளார்கள். இதையும் அச்சுப்பிழை யென்று சொல்லிப் பிழைக்கவேண்டுமிவர்கள்.

14. காஞ்சி ஸ்வாமியை தேசிகத்வேஷி யென்றும் தேசிக தூஷகரென்றும் நிந்தித்து க்ருதக்ருத்யர்களாகிறார்களிவர்கள் பெரும்பாலும். இவர்களிடமுள்ள ப்ரத்யஸ்த்ரம் இதுவேயாகும். தேசிக க்ரந்தங்களை யெல்லாம் மாலை மாலையாக அச்சிட்டும் அவற்றுக்கு வியாக்கியானங்களை யெழுதி வெளியிட்டும் அவற்றை விசேஷித்துக் கையாண்டும் போருகிற ஸ்வாமியை இவர்கள் தேசிகத்வேஷி யென்று பறைசாற்றுவதன் உண்மைக் காரணத்தை உலகம் உணர்ந்தேயிருக்கின்றது. நிராதாரமாக இவர்கள் எழுதிவரும் தேசிக சரித்திரங்களிலுள்ள தவறுகளை ஸரியான ஆதாரங்களைக் கொண்டு நிரூபித்தல், இவர்களுடைய கொள்கைகள் தேசிக ஸ்ரீஸூக்திகளோடு மிகவும் முரண்பட்டிருக்கின்றன வென்று விளக்கிக் காட்டுதல், நவீன காலத்தில் தான் இவர்கள் தேசிகனோடு உறவு கொண்டாட ஆரம்பித்தார்களென்பதைப் பல சான்றுகளால் உபபாதித்தல் முதலியவை காஞ்சீ ஸ்வாமியின் நூல்களில் மலிந்திருப்பதனுல் அவரை தேசிகத்வேஷி யென்று நிந்திப்பது தவிர வேறு வழியில்லைதான் இவர்களுக்கு. உப்பிலியப்பன் ஸன்னிதி நவநீதம் ஸ்ரீராமதேசிகாசாரியர் ஸமீபகாலத்தில் வெளியிட்ட ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸார மூலப் பதிப்பில் அவர் தேசிக சரித்திர மெழுதத் தொடங்குகையில் ஆர்ஜவத்தோடு எழுதியிருப்பதை ஸ்ரீராமாநுஜன் 150ல் கடைசி பக்கம் விவரித்திருப்பது கொண்டு உலகம் உண்மையுணர்ந்திருக்கின்றது. ஸம்வாதச் சுருணைக்குப் பலபல மறுப்புகள் வெளிவந்துள்ளதனுல் இவ்வளவே போதுமென்று நிற்கிறோம். ... ...

श्रीरङ्गसुन्दराचार्यकरपल्लवनिर्गता। सैषा संवादसंमार्जन्याचन्द्रार्कं विजेष्यते ॥

கோயில். மெ. ஸுந்தரராஜாசாரியர் எழுதிய

ஸம்வாதஸம்மார்ஜனி முற்றுப்பெற்றது.

60. விச்வாமித்ர தசரத ஸம்வாதத்தின் நிகழ்ச்சிகளை ஸாரமாகத் தெரிவித்து, அதில் தோன்றக்கூடிய சங்கைகளை அநுவதித்தோம். அஸஹாய சூரரான விச்வாமித்திரர் துணையை விரும்பி வரவேண்டிய அவசியமே யில்லை யென்பது முதல் விஷயம். இராமனோடு கூட நானும் வருகிறேனென்று சக்ரவர்த்தி சொல்ல, அதை மறுக்க வேண்டிய அவசியமில்லை யென்பது இரண்டாவது விஷயம். ஆனால் இவ்விரண்டு விஷயங்களும் ஸ்ரீராமாயணத்தில் நிகழ்ந்திருக்கின்றன. இதை நாம் நன்கு ஆலோசித்துப் பார்க்கையில் உள்ளபடி தோன்றக் கூடிய மருமங்களை வெளியிடுகிறோமிங்கு

61. விச்வாமித்ர முனிவர் ஒருவரையும் துணை கொள்ளாமல் எத்தனையோ அரும் பெருங்காரியங்களைச் செய்து, நிலைக்கட்டி யிருக்கிறாரென்பது உண்மை. இப்போது அவர் தசரத சக்ரவர்த்தியிடம் வந்தது தாம் செய்யத் தொடங்கிய வேள்விக்குத் துணை வேண்டி யென்று கொள்ள வேண்டா; பல பல கருத்துக்களை நெஞ்சிற் கொண்டே அவர் வந்திருக் கிறார். ஸீதா விவாஹம் செய்து வைப்பது அவருடைய உத்தேச்யங்களுக்கு எல்லை நிலமா னது. அதற்கு முன்னே பல உத்தேசங்களுண்டு; அவற்றை யெல்லாம் அடைவே நிறை வேற்றிக் கொண்டபடியை விளக்குவோம்.

62. ஸாக்ஷாத் பரமபுருஷனே தசரதாத்மஜனாகத் திருவவதரித்தருளினனென்கிற தத் துவத்தை வெளியிடுதல் முதன்மையான விவக்ஷிதம். சக்ரவர்த்தி தனக்கு வெற்றிலைச் செருக்காலே மக்கள் பிறந்ததாக நினைத்திருப்பதொழிய ஸ்ரீமந்நாராயணனே தன்னை நான்கு மூர்த்திகளாக வகுத்துக் கொண்டுவந்து அவதரித்ததாக நினைக்க ப்ரஸக்தி யில்லாமலிருந் தது. வஸிஷ்டாதிகளான மஹர்ஷிகளுங்கூட இதனை அறியப் பெறுமலிருந்திருக்கலாம். *ब्रह्मवादिनो वदन्ति — ப்ரஹ்மவாதிநோ வதந்தி* என்கிற முறையில் தெரிவித்து வைக்க வேணு மென்பது முதல் விவக்ஷை. இதைத் தெளிவித்தபடி எங்ஙனே யென்னில்; अहं वेद्मि महात्मानं रामं सत्यपराक्रमम्। वसिष्ठोऽपि महातेजा ये चेमे तपसि स्थिता:- அஹம் வேத்மி மஹாத்மாநம் ராமம் ஸத்யபராக்ரமம். வஸிஷ்டோபி மஹாதேஜா யே சேமே தபஸி ஸ்தி தா:* என்றது தலைமை பெற்ற வார்த்தை. *वेदाहमेतं पुरुषं महान्तम् — வேதாஹமேதம் புரு ஷம் மஹாந்தம்'' என்ற புருஷஸூக்தமேயன்றோ * அஹம் வேத்மி மஹாத்மாந மென்று வடிவெடுத்திருக்கிறது. சக்ரவர்த்தி இராமபிரானை ஸாமாந்ய புருஷனாக அறிந்திருப்பது தவறு என்பதைக் காட்டுவதற்கே யன்றோ *அஹம் வேத்மி மஹாத்மாநம்* என்றது.

63. சக்ரவர்த்தி இராமபிரானை இங்ஙனம் நினைத்திருக்கவில்லை யென்பது எங்ஙனம் தெரிகின்றதென்னில்; அவன் சொன்ன வார்த்தையில் "ऊनषोडशवर्षो मे रामो राजीवलोचनः- ஊனஷோடச வர்ஷோ மே ராமோ ராஜீவலோசந:" என்றுள்ளது. இதில் 'மே ராம:' என்று மமகாரம் விளங்கக் கூறியிருப்பது விச்வாமித்ரமுனிவன் கருத்தாலே அசட்டு வார்த் தையாகக் கொள்ளப்பட்ட. மே ராம: என்றது மம புத்ரோ ராம: என்றபடியாதலால் 'உல குக்கெல்லாம் தந்தையான பெருமானை உன் புதல்வனாக நீ நினைத்தாயே, இவன் அப்படிப் பட்டவனல்லன் காண்; வேதங்களறுதியிட்ட பெருமையை யுடைய மஹாபுருஷன் காண் என்று இடித்துக் கூறப்பட்டதாயிற்று.

64. சக்ரவர்த்தியின் வாக்கிலும் ஒரு விசேஷம் கவனிக்கத் தக்கதுண்டு. 'மே ராம:' என்று சொன்னவுடனே ராஜீவலோசந: என்று சொல்லியுள்ளது மருமமான வார்த்தை. ராஜீவலோசந: என்பதற்குத் தாமரைக் கண்ணன் என்று பொருள். ஸூரியன் அஸ்தமித்த வாறே தாமரை மூடிக் கொள்ளுமாபோலே என் குமாரனான இச்சிறுவன் மாலைப் பொழு தானவாறே கண்ணுறங்கிப் போவானே; இரவில் வந்து பொருவதையே இயற்கையாக

வுடையரான நிசாசரர்களோடே போர் புரிவது இவனுக்கு எப்படி இயலும்? என்பது மேலெழத் தோன்றும் பொருள். பகவானுக்கு வடமொழியில் புண்டரீகாக்ஷ: என்கிற திருநாமமும் ப்ரஸித்தமாதலால் அந்த பகவானே தனக்கும் புதல்வனாக வந்து அவதரித்துள்ளானென்பதைத் தானுமறிந்துள்ளதாகத் தெரிவித்திருப்பதும் ஈண்டு மருமமான விஷயம்.

65. இப்படி சொல்லிவிட்டால் சக்ரவர்த்திக்கு இராமனிடத்தில் பகவத் ப்ரதிபத்தி இல்லாமலிருந்ததென்றும், விச்வாமித்திர முனிவன் அதை யுணர்த்த வந்தானென்றும் சொல்லுவது எங்ஙனே பொருந்துமென்று சங்கை பிறக்கும். இது பரவசமாக வந்த வார்த்தையே யொழிய மநஸ்கரித்துச் சொன்ன வார்த்தை யன்று என்று கொள்ள வேணும். ஸீதா விவாஹத்திற்குப் பிறகு பரசுராமன் * என் வில் வலிகண்டு போவென் றெதிர் வந்த காலத்திலே இந்த சக்ரவர்த்தி அஞ்சி நடுங்கி "बालानां मम पुत्राणाम् अभयं दातुमर्हसि— பாலாநாம் மம புத்ராணும் அபயம் தாதுமர்ஹஸி" என்று இராமபிரான் திறத்திலே தன்னுடைய ப்ரதிபத்தியை வெட்ட வெளிச்சமாக்கினவனன்றோ. "அஹம் வேத்மி மஹாத்மாநம்" என்ற முனிவன் வார்த்தை செவிப்பட்ட பின்புங்கூட சக்ரவர்த்திக்குத் தெளிவில்லாமலேயிருந்ததாக இசைந்து தீரவேண்டும். அது நிற்க.

66. பரத்வம் ஸௌலப்யம் என இரண்டு குணங்களுண்டு. இவ்விரண்டு குணங்களையும் நாம் ஏகாச்ரயத்தில் காண்பது அரிது. மேருமலை, கைலாஸமலை, பாற்கடல் என்னுமித்தகைய பொருள்கள் பரத்வம் மிக்கவையானாலும் இவை நம்முடைய கண்ணுக்கு மெட்டாதவையாதலால் இவற்றில் ஸௌலப்யமில்லை யென்றறியலாம். காஷ்ட லோஷ்டாதிகளிலே ஸௌலப்ய மிருந்தாலும் இவ் ஒருவருடைய விருப்பத்திற்கும் இலக்காகாமையாலே இவற்றில் பரத்வமில்லை யென்றறியலாம். உலகத்தில் ராஜாதிராஜர்களாய் விளங்கும் மஹாப்ரபுக்கள் பரத்வமுள்ளவர்களே யொழிய ஸௌலப்யசாலிகளல்லர். நம்மோடு எளிதாகக் கலந்து பழகுமவர்கள் ஸௌலப்யசாலிகளே யொழியப் பரத்வ முடையவர்களல்லர். இவ்விரண்டு குணங்களையும் ஏகாச்ரயத்தில் காணவேணுமானல் எம்பெருமானொருவனிடத்தில் தான் காணமுடியும். விச்வாமித்ர முனிவன் இவ்விரண்டு குணங்களையும் அநுபவித்துக் காட்ட வந்தவன். எங்ஙனே யெனின்;

67. *அஹம் வேத்மி மஹாத்மாநம்* என்று பரத்வத்தை ஸதஸ்யமாகக் கூறியநுபவித்தவன் ஸௌலப்யத்தை ரஹஸ்யமாக அநுபவிக்கிறபடி பாரீர்; தான் அழைத்துக் கொண்டு சென்ற தசரதாத்மஜக் குழந்தைகள் கண்வளர்ந்தருளா நிற்க ஸுப்ரபாதத்தில் துயிலுணர்த்தப் புகுந்த முனிவன்

"कौसल्यासुप्रजाराम ! पूर्वा सन्ध्या प्रवर्तते । उत्तिष्ठ नरशार्दूल ! कर्तव्यं दैवमाह्निकम्—

கௌஸல்யாஸுப்ரஜா ராம! பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே. உத்திஷ்ட நரசார்தூல! கர்த்தவ்யம் தைவமாஹ்நிகம்." என்று கூறினன்; இதில் உத்திஷ்ட நரசார்தூல! என்னுமதே, "உத்திஷ்ட தேவதாஸிம்ஹ" என்றோ "உத்திஷ்ட மஹீயாத்மந்! என்றோ கூறியிருந்தால் அது "அஹம் வேத்மி மஹாத்மாநம்" என்றதற்கு மிகப் பொருந்தும். மனிதர்களோடு புரையறக் கலந்து பழகுவதற்காக மநுஷ்ய ஸஜாதீயனாய் அவதரித்தவனே! என்பதன்றோ 'நரசார்தூல!' என்றதன் கருத்து. "भवान्नारायणो देवः— பவாந் நாராயணோ தேவ:" என்றும் நாராயணத்வத்தை நிந்தையாக நினைத்து, "आत्मानं मानुषं मन्ये रामं दशरथात्मजम्— ஆத்மாநம் மாநுஷம் மந்யே ராமம் தசரதாத்மஜம்" என்று சொல்லித் தனக்கு மநுஷ்யத்வத்திலேயே உகப்பாகச் சொல்லுமவனென்னுமிடத்தை முனிவன் அறியுமவனாகையாலே அவனுகப்பைப் பின் சென்று "உத்திஷ்ட நரசார்தூல!" என்றது மிகப்பாங்கு. ஆக, பரத்வ

ஸௌலப்யங்களிரண்டையும் பேசி யனுபவிக்கவே விச்வாமித்ரமுனிவன் வந்தானென்றும், வேள்வியைக் காத்துத் தரவேணுமென்கிற அபேக்ஷை வியாஜமாத்ரமென்றும் கொள்ளக் கடவது.

68. விச்வாமித்ர முனிவன் வந்தானென்பதைவிட, இராமபிரான் விச்வாமித்ர முனிவனை வரவழைத்தானென்று கொள்ளுவதும் மிகப் பொருந்தும். இராமன் அவனை எதற்காக வரவழைக்க விரும்பினனென்னில் அது சொல்லுகிறேம். முனிவன் வாயினல் பரத்வம் ஸௌலப்யமாகிற இரண்டு குணங்களும் வெளிவந்தாலும், இராமபிரானுக்கு ஸௌலப்ய குணமொன்றைமட்டும் வெளியிடுவதில் மிக விருப்பம். முனிவனிடத்தில் தன் வாக்கினுல் இராகவன் வெளியிட்டுக் கொண்ட ஸௌலப்யம் வெகு அற்புதமானது. இங்ஙனம் வேறு எந்த விடத்திலும் வெளியிட்டுக் கொண்டதில்லை. அதாவது,

"इमौ स्म मुनिशार्दूल! किङ्करौ समुपस्थितौ। आज्ञापय यथेष्टं वै शासनं करवाव किम्—

இமௌ ஸ்ம முநிசார்தூல! கிங்கரௌ ஸமுபஸ்திதௌ, ஆஜ்ஞாபய யதேஷ்டம் வை சாஸநம் கரவாவ கிம்." என்பதாக இராமபிரானுடைய திருவாக்கில் நின்றும் வெளிவந்த சுலோகமானது மிகவற்புதம். இத்தகைய வார்த்தை வேறு எங்கும் கண்டதில்லை. இதனை வெளியிடுவதற்கே விச்வாமித்திரனை வரவழைத்தானென்னலாம். இந்த சுலோகத்தில் சொற்சுவையையும் பொருட்சுவையையும் சிறிது அநுபவிப்போம்.

69. முனிவன் தன்னை நோக்கி "(உத்திஷ்ட) நரசார்தூல!" என்றதனுல் அதற்கு உகந்து ராகவன் அவனை முனி சார்தூல! என்று விளித்தனன். என்னை நரசார்தூலனுகக் கண்டறிந்து பேசின நீதான் முநிசார்தூல னென்றவாறு. அதற்கு மேல் "இமௌ கிங்கரௌ ஸமுபஸ்திதௌ" என்றது தன்னுடைய தீரச் சொன்ன வார்த்தை. தானும் இளையோனுமாகிய இருவரும் கைங்கரியம் செய்யவே வந்திருப்பதாகக் கூறினனிங்கு. கைங்கர்யம் என்னுஞ் சொல் கிங்கர சப்தத்தை ப்ரக்ருதியாக கொண்டு நிஷ்பந்நமானதே யாகுலும் கைங்கர்யபதம் போல் கிங்கரபதம் அவ்வளவு ப்ரஸித்தமானதன்று. வேலைக்காரனென்னும் பொருளைத் தெரிவிக்கவல்ல வடசொற்கள் भटः भृत्यः, सेवकः இத்யாதிகள் பல இருந்தாலும் किङ्करः என்னுஞ் சொல் தனிச் சிறப்பு வாய்ந்தது.

"किं करवाणि? किं करवाणि? इत्याशंसमानः किंकरः—

கிம் கரவாணி? கிம் கரவாணி? இதி ஆசம்ஸமாநः கிங்கர:" என்று வ்யுத்பத்தி கூறுவர். பிரபுவின் அருகிலேயே யிருந்து கொண்டு என்ன பணி செய்யக் கடவேன்? என்ன பணி செய்யக் கடவேன்? என்று பணிவிடை செய்யக் குதூஹலம் கொண்டிருப்பவன் கிங்கரன் என்றதாயிற்று. "தேவிமாராவார் திருமகள் பூமி, ஏவ மற்றமரராட் செய்வார்" என்ற திருவாய்மொழியின்படி நித்ய முக்தர்களெல்லாரும் தனக்குப் பணிவிடை செய்யக் காத்திருக்க, தான் பிறர்க்குப் பணிவிடை செய்யக் குதூஹலங் கொண்டு வந்திருப்பதாகக் கூறினவிது ஆச்சரியமன்றே. திருநாட்டில் ஸ்வாதந்திரியத்தை வஹித்திருந்தது கிலேசமாகத் தோன்றிப் பாரதந்திரியங் கொண்டு களிப்பதற்காகவே இந்நிலத்திற் போந்தானென்றது தத்துவம். அதனைத் தன் வாயினுற் சொல்ல விரும்பினன். இந்த வார்த்தையை யாரிடத்தில் வெளியிட்டால் ரஸிக்கு மென்று பார்த்தான். வழிப்போக்கர்களிட்டால் அது சுவையுடைத்தாகா தென்றறுதியிட்டு இதற்காகவே விச்வாமித்திர முனிவனை வரவழைத்தான் இராமபிரான் என்றால் இது ஒருகாலும் ஏறிட்டுச் சொல்லும் வார்த்தையாகாது.

70. பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்திலே "कलभं क एव स्नात्वाऽपि धूलीरसिकं निषेद्धा— கலபம் க ஏவ ஸ்நாத்வாபி தூலிரஸிகம் நிஷேத்தா?" என்றருளிச் செய்கிறார். யானைப்

பாகன் யானையைப் பரிஷ்காரமாக நீராட்டினாலுங் கூட, அவ்யானை தன் தலையில் தானே மண்ணைவாரி யெறிந்து கொள்வதில் ருசியுடைத்து என்கை. அது போல எம்பெருமான் வேத வேதாங்கங்களினால் தான் ஸகல ஜகத் காரண பூதனாகவும் ஸர்வ சேஷியாகவும் ஸர்வ ரக்ஷகனாகவும் ஸர்வஸ்வாமியாகவும் அறுதியிடப்பட்டாலும், அவன் அந்தத் தன்மைகளைத் தனக்குத் தேஜஸ்கரமாக நினையாதே அவற்றுக்கு எதிர்த்தட்டான தன்மைகளையே தனக்குச் சிறப்பாக நினைப்பவன். ஸர்வ ஜகத் காரணபூதனான தான் கார்யபூதனாக விருந்து பெருமை பெற வேணுமென்று விரும்பி 'மகனொருவர்க்கல்லாத மாமேனி மாயன் மகனாம்' என்கிற படியே தசரத வஸுதேவ நந்தகோபாதிகளுக்கு மகனாகப் பிறந்து கார்யபூதனாகிறான். ஸர்வ சேஷியான தான் சேஷியாயிருக்கு மிருப்பிற்காட்டிலும் சேஷபூதனாயிருக்கு மிருப்புக்கு ஆசைப்படுகிறான். [சேஷியென்றால் கைங்கரியம் கொள்ளுபவன்; சேஷனென்றால் கைங்கரியம் செய்பவன்.] ஸர்வ ரக்ஷகனான தான் ரக்ஷ்யனாயிருக்க விரும்பி "காப்பாருமில்லை கடல் வண்ணா வுன்னை தனியே போய் எங்குந் திரிதி" என்னும் படியிருப்பன். "காக்கு மியல்வினன் கண்ணபெருமான்" என்று ப்ரஸித்தி பெற்றவன். "காப்பாருமில்லை கடல்வண்ணா வுன்னை" என்னும்படி நிற்பதும் "सर्वान्देवान्नमस्यन्ति रामस्यार्थे यशस्विनः— ஸர்வாந் தேவாந் நமஸ்யந்தி ராமஸ்யார்த்தே யஶஸ்விந:' என்னும்படி நிற்பதும் ரக்ஷ்யத்வத்தில் விருப்பத்தினாலே யன்றோ.

71. இவ்வண்ணமாகவே ஸகலரும் கைங்கரியஞ் செய்ய ஆசைப்படவும் ஆசைப்பட்டபடியே செய்யவும் பாத்திரமான பெருமான் தான் கைங்கரியம் செய்ய விரும்பி வந்து பிறப்பதும், அந்த விருப்பத்தைத் தன் வாயினால் வெளியிட விரும்புவதும், அந்தத் தருணத்திலே வெளியிட வேண்டி விச்வாமித்திர முனிவரை ஒரு வியாஜங் கொண்டு வரச் செய்ததும் நுட்பமாக வறியத் தக்க விஷயங்கள்.

72. இராகவன் *கிங்கரௌ ஸமுபஸ்திதௌ* என்னுமிவ்வார்த்தையைச் சொன்னது எப்போதென்னில்; தாடகாதாடகேய நிரஸநமான பின்பு. அதாவது, பாலகாண்டம் முப்பத்தோராவது ஸர்க்கத்திலுள்ளது. அதற்கு முன்னே முப்பதாவது ஸர்கத்தின் முடிவில் விச்வாமித்திர முனிவன் வார்த்தை எவ்விதமாக வுள்ளதென்று காணவேணும்.

"अथ यज्ञे समाप्ते तु विश्वामित्रो महामुनिः। निरीतिका दिशो दृष्ट्वा काकुत्स्थमिदमब्रवीत्। कृतार्थोऽस्मि महाबाहो कृतं गुरुवचस्त्वया— அத யஜ்ஞே ஸமாப்தே து விச்வாமித்ரோ மஹாமுநி:, நிரீதிகா திசோ த்ருஷ்ட்வா காகுத்ஸ்த மிதமப்ரவீத்; க்ருதார்த்தோஸ்மி மஹாபாஹோ! க்ருதம் குருவசஸ் த்வயா." என்று அங்குள்ளது. 'க்ருதம் குருவசஸ் த்வயா' என்றது ஸாரமான வார்த்தை. "विक्रमो दर्शितस्त्वया— விக்ரமோ தர்சிதஸ் த்வயா" என்று சொல்லவேண்டிய ஸந்தர்ப்பத்தில் அங்ஙனம் சொல்லாதே 'குருவச: த்வயா க்ருதம்' என்றது இராமபிரானுடைய திருவுள்ள வுகப்புக்கு உறுப்பான வார்த்தை. பெரியோர் சொல்லிற்றைச் சிறியோர் அனுட்டிப்பதென்பது ஸாமாந்ய தருமம். இந்த ஸாமான்ய தருமத்தை யனுட்டிப்பதற்கென்றே இராமபிரான் திருவவதரித்தது. இராமன் எது செய்தாலும் அங்கங்கே பெரியோருடைய நியமனம் ஹேதுவாக நிற்கும். "விச்வாமித்ரஸ்ய சாஸநாத்" "பிதுர்வசந நிர்தேசாத்" "அகஸ்த்ய வசநாத்" "பரத்வாஜஸ்ய சாஸநாத்" என்றிங்ஙனம் அங்கங்கே பெரியோருடைய கட்டளையை இராமபிரானுடைய செய்கைக்கு ஹேதுவாகச் சொல்லியிருப்பது காணலாம். அதற்கெல்லாம் ஸூத்ரம் போலுள்ளது "க்ருதம் குருவசஸ் த்வயா" என்னு மிந்த வார்த்தை. இப்பெருங்குணத்தைக் காட்டி வைப்பதற்காகவும் விச்வாமித்திர முனிவன் வந்தானென்க.

Released by Maran's Dog, Toronto, Canada

CALENDAR for 1962.

	JANUARY	FEBRUARY	MARCH
Sun.	... 7 14 21 28	... 4 11 18 25	... 4 11 18 25
Mon.	1 8 15 22 29	... 5 12 19 26	... 5 12 19 26
Tues.	2 9 16 23 30	... 6 13 20 27	... 6 13 20 27
Wed.	3 10 17 24 31	... 7 14 21 28	... 7 14 21 28
Thur.	4 11 18 25 ..	1 8 15 22 ...	1 8 15 22 29
Fri.	5 12 19 26 ...	2 9 16 23 ...	2 9 16 23 30
Sat.	6 13 20 27 ...	3 10 17 24 ...	3 10 17 24 31

	APRIL	MAY	JUNE
Sun.	1 8 15 22 29	... 6 13 20 27	... 3 10 17 24
Mon.	2 9 16 23 30	... 7 14 21 28	... 4 11 18 25
Tues.	3 10 17 24 ...	1 8 15 22 29	... 5 12 19 26
Wed.	4 11 18 25 ...	2 9 16 23 30	... 6 13 20 27
Thur.	5 12 19 26 ..	3 10 17 24 31	... 7 14 21 28
Fri.	6 13 20 27 ...	4 11 18 25 ...	1 8 15 22 29
Sat.	7 14 21 28 . .	5 12 19 26 ...	2 9 16 23 30

	JULY	AUGUST	SEPTEMBER
Sun.	1 8 15 22 29	... 5 12 19 26	30 2 9 16 23
Mon.	2 9 16 23 30	... 6 13 20 27	... 3 10 17 24
Tues.	3 10 17 24 31	... 7 14 21 28	... 4 11 18 25
Wed.	4 11 18 25 ..	1 8 15 22 29	... 5 12 19 26
Thur.	5 12 19 26 ...	2 9 16 23 30	... 6 13 20 27
Fri.	6 13 20 27 ...	3 10 17 24 31	... 7 14 21 28
Sat.	7 14 21 28 ...	4 11 18 25 ...	1 8 15 22 29

	OCTOBER	NOVEMBER	DECEMBER
Sun.	... 7 14 21 28	... 4 11 18 25	30 2 9 16 23
Mon.	1 8 15 22 29	... 5 12 19 26	31 3 10 17 24
Tues.	2 9 16 23 30	... 6 13 20 27	... 4 11 18 25
Wed.	3 10 17 24 31	... 7 14 21 28	... 5 12 19 26
Thur.	4 11 18 25 ...	1 8 15 22 29	... 6 13 20 27
Fri.	5 12 19 26 ...	2 9 16 23 30	... 7 14 21 28
Sat.	6 13 20 27 ...	3 10 17 24 ...	1 8 15 22 29

Released by Maran's Dog, Toronto, Canada

Released by Maran's Dog ,Toronto, Canada

If not delivered Please return to :—

"AMRUTALAHARI" OFFICE,

East Chitra Street, Srirangam.

To

Sri

Released by Maran's Dog ,Toronto, Canada

Printed and Published by S. M. Sundararajacharya at the Sri Vilasam Press, Srirangam.